# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு

**கூட்ட எண்.75** **நாள்.28.05.2021**

பொருள் சாதாரண மன்ற கூட்டம் – அரக்கோணம் நகராட்சி –
நாள்.31.05.2021 வெள்ளிக்கிழமை முற்பகல் 10,00 மணிக்கு
சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக,

------

அரக்கோணம் நகராட்சி 31.05.2021 வெள்ளிக்கிழமை முற்பகல் 10,00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**பொருள் எண்.01**

நகராட்சி ஆணையாளர் (பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல்/2021 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.02**

தமிழ்நாடு நகரில் பயிற்சி நிறுவனத்திற்கு இந்நகராட்சியின் ஆண்டு பங்கு தொகையாக (முதல் நிலை நகராட்சிக்கு) ரூ.50,000/– செலுத்தப்பட்டு வந்தது. தற்பொது அரசாணை நிலை எண்.36, நாள்.19.04.2021–ன்படி முதல் நிலை நகராட்சிக்கு 01.04.2021 முதல் தொகை ரூ.50,000/–லிருந்து ரூ.75,000/–ஆக உயர்த்தி தமிழ்நாடு நகரில் பயிற்சி நிறுவனத்திற்கு பங்கு தொகை செலுத்துமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி 2021–22 ஆம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சியின் பங்கு தொகை ரூ.75,000/–ஐ நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு**: அரசாணை நிலை எண்.36, நாள்.19.04.2021ன்படி 2021–22 ஆம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சியின் பங்கு தொகை ரூ.75,000/–ஐ நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1479/2017/சி1)

**பொருள் எண்.03**

இந்நகராட்சியில் ஈமசடங்கு செய்திட ஆதிதிராவிடர்களுக்கு மற்றும் பழங்குடியினர்களுக்கு ஈமக்கடன் ஆக தொகை ரூ,2500/– வழங்கப்பட்டு வந்தது. தற்போது அரசாணை (நிலை) எண்.105, நாள்.19.10.2020–ன்படி ரூ.5,000/– உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி பிப்ரவரிலிருந்து மாதத்திலிருந்து ஈமக்கடன் ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்கவும் மேற்படி அரசாணையின் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.0208/2021/சி4)

**பொருள் எண்.04**

இந்நகராட்சியில் 2021–2022ஆம் ஆண்டிற்கு கனிணியில் பயன்படுத்தப்படும் பிரிண்டர்களில் டோனர்கள் இருப்பு குறைந்த அளவே உள்ளது. மேலும் புதிய டோனர்கள் வாங்கும் பொழுது விலை மிகவும் அதிகமாக உள்ளதால் பயன்படுத்தப்பட்ட டோனர்களை Refilling செய்வதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோறியதற்கு கீழ்கண்டவாறு 05.05.2021 விலைப்புள்ளி வருமாறு.

| வ.எண் | விவரம் | கடையின் பெயர் | ஓன்றின் விலை | | |
|---|---|---|---|---|---|
| | | | Drum | Refiling | Blade |
| 1 | 88A tonner Refiling | SRI SAI COMPUTERS | 250 | 350 | 150 |
| 2 | 88A tonner Refiling | ANAND COMPUTERS | 300 | 400 | 225 |
| 3 | 88A tonner Refiling | NILAW COMPUTERS & INVERTERS | 350 | 450 | 250 |

மேற்காணும் விவரப்படி குறைந்த விலைப்புள்ளி SRI SAI COMPUTERS அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கவும், அதற்கான உத்தரவு வெலவினம் ரூ.50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ சாய் COMPUTERS அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்குவதற்றும் அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.50,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2989/2017/பி2)

**பொருள் எண்.05**

நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் உணவகம் (ஒட்டல் அலங்கார்) குத்தகைதார திரு.முகமதுகுட்டி என்பவர் கடந்த 2.12.2013 அன்று இறந்து விட்டதால் அன்னார் பெயரில் இயங்கி வரும் ஒட்டலை பெயர் மாற்றம் செய்து தருமாறும் அன்னாரின் வாரிசுதார் திரு.M.P.அப்துல் ரஹமான் கோரி உரிய ஆவணங்கள் சமர்பித்துள்ளார் இந்த ஆவணங்களின் அடிப்படையிலும் அரசு ஆணை எண்.92 நாள் 3.7.2007–ன் படி வரிசை எண்.3 உட்பிரிவு III–ல் குத்தகைதாரர் இறந்து விடும் நேரில் அவரின் சட்டப்படியான வாரிசுகள் (அவரின் மனைவி அல்லது கணவன் அல்லது அவர்களின் குழந்தைகள் மட்டும்) நிபந்தனைகளுக்கு இணங்கி நடக்க ஒப்புக் கொள்வதற்கு உட்பட்டு அவர்கள் குத்தகையைத் தொடர அனுமதிக்கலாம். மேலும் வரிசை என்.4 உட்பிரிவு IV குத்தகைதாரரின் வாரிசு தாரர்கள் அனைத்துப் பாக்கித் தொகைகளையும் செலுத்துவதன் பேரிலும். நகர்ப்புற உள்ளாட்சி மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகைத் தொகையைச் செலுத்த ஒப்புக்கொள்ளும் நிபந்தனைக்குட்பட்டும் அவர்களுடைய பெயரில் குத்தகை உரிமை மாற்றம் பெற உரிமையுடைவராவர். சட்டப்படியான வாரிசுதார்கள் பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் குத்தகை நிர்ணயத்திற்கு உட்பட்டவர்களாவர், பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.500/– (ருபாய் ஐநூறு மட்டும்) ஆக நிர்ணயிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் மேற்படி கடையின் வாடகையின் நிலுவையின்றி மே–2021 வரை செலுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அரசாணையில் குறிப்பட்டுள்ளவாறு நிபந்தனைக்குட்பட்டு காலஞ்சென்ற அலங்கார் ஒட்டல் குத்தகைதாரர் திரு.முகமதுகுட்டி என்பவரின் பெயரிலிருந்து (வரி விதிப்பு எண்.024/206719) அவரது வாரிசுதாரர் மகனுமாகிய திரு.M.P.அப்துல் ரஹமான் என்பவர் பெயருக்கு குத்தகையில் மாற்றம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.213/2021/அ1)

**பொருள் எண்.06**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கியதை தொடந்து ந.க.எண். NCI(4)/1875/2020/ நாள்.26.08.2020–ன்படி குடிநீர் வழங்கல் பாதிக்காத வண்ணம் தக்கோலம் நீரேற்று நிலையத்தில் ஜெனரேட்டர் இயந்திரம் KVA, மற்றும் பணியாட்களுக்கு தேவையான மழை தங்கி (Rain coat), டிசல் கேன், Bubble Tap ஆகியவை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வாங்கிடவும், ஜெனரேட்டர் ஆகும் தோரய செலவினம் ரூ.175000/–ற்கு வெள்ள நிவாரண பணிகள் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1920 பிரிவு 15–ன்9 கீழ் பணியினை மேற்கொள்வும் உள்ளுர் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தாரர் திரு.வி.தசதிஷ்குமார் மூலம் பணியினை மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு சமப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1817/2020/இ1**

**பொருள் எண்.07**

நடைபெற உள்ள தமிழ்நாடு சட்ட மன்ற பொது தேர்தல் 2021, 038–அரக்கோணம் (தனி) சட்ட மன்ற தொகுதியில் அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்கள் வாக்களிக்க ஏதுவாக அரக்கோணம் நகராட்சி பள்ளிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர், மின் விளக்கு (கூடுதலாக), மின்சவிசிறி (கூடுதலாக), தடுப்புகள் மற்றும் சாய்வுதளம் அமைத்து தரும்படி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுரை வழங்கியதை தொடந்து, போலாட்சியம்மன் நகராட்சி பள்ளியில் கூடுதலாக வாக்கு சாவடி மையம், பழுதடைந்த நகராட்சி பள்ளி கட்டிட பராமரிப்பு பணி மற்றும் குடிநீர், மின்விளக்கு, சாய்வு தளம் போன்ற அடிப்படை வசதிகளை செய்துதர தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.365000/–க்கு தேர்தல் பணியின் அசவர அவசியம் கருதி நகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1920 பிரிவு15–ன்கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்த்தாரர் திரு,ரமேஷ்பாபு அவர்கள் மூலம் பணியினை மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கு சமப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.236/2020/இ1**

**பொருள் எண்.08**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9 மோசூர் ரோடு அம்பேத்கார் நகர் பகுதியில் நெடுஞ்சாலை துறையினர் கால்வாய் அமைக்க சாலையின் ஒரத்தில் பள்ளம் தோண்டியதில் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் பகிர்மான குழாயினை சேதப்படுத்தியுள்ளதால் அதன் வழியாக கழிவு நீர் புகுந்து பொதுகுழாய் மற்றும் வீட்டு குடிநீர் இணைப்புகளில் அசுத்தமான நீர் செல்வதால், நேரிடையாக இடம் ஆய்வு செய்யப்பட்டு சரி செய்யும் முயற்சிகள் செய்யப்பட்டும் முடியாத சூழ்நிலையில் தற்போது அரக்கோணம் அங்காளம்மன் கோயில் முதல் மோசூர் சாலையில் உள்ள சுடுகாடு பகுதியில் மயான கொள்ளை திருவிழா 13.03.2021–ல் நடைபெற உள்ள நிலையில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் 12.03.2021 மற்றும் 13.03.2021 மற்றும் 14.03.2021 ஆகிய மூன்று நாட்களுக்கு டிராக்டர்கள் மூலம் குடிநீர் வழங்கிடவும் மேலும் பக்தர்கள் பெருமளவில் பங்கேற்க உள்ளதால் வழி நெடுவிலும் அங்காங்கே 1000 லிட்டர் குடிநீர் தொட்டி மற்றும் ஸ்டேண்டுடன்

இடங்களில் அமைத்திட தோரய செலவினம் ரூ.120000/-ற்கு அனுமதிக்கும் பணியின் அசவர அவசியம் கருதி நகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1920 பிரிவு15-ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்த்தாரர் நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.சதீஷ்குமார் அவர்கள் மூலம் பணியினை மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கு சமப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2019/இ1**

**பொருள் எண்.09**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை வெகு அதிகமாக பரவி வருவதால் அரசின் பொது மருத்துவ மனையில் உள்ள படுக்கைகள் நிரம்பி நோயாளிகள் தங்க இடமில்லாமல் ஒரே நாளில் 6 இறப்புகள் நடந்துள்ளதால் கூடுதலாக நோயாளிகளை தங்க வைக்க தற்காலிகமாக அரசு மருத்துவமனை எதிரில் உள்ள டவுன் ஹால் மண்டபத்தில் தற்காலிகமாக படுக்கை வசதிகள் ஏற்படுத்திட மாவட்ட ஆட்சியர், இராணிப்பேட்டை மாவட்டம், மற்றும் மருத்துவ அலுவல, ஆணையர் ஆகியோர் மேற்கண்ட மண்டபத்தை பார்வையிட்டு 100 படுக்கைகள் தயார் செய்திட அறிவுரை வழங்கினர். மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நகராட்சிகளிகன் மூலம் 3 எண்ணிக்கை தற்காலிக கழிபறைகளை அமைத்து நோயாளிகள் பயன்பாட்டிற்கு விடுமாறு அறிவுரை வழங்கியதை தொடந்து டவுன் ஹால் மண்டலம் பின்புறம் காலியாக உள்ள இடத்தில் 3 எண்ணிக்கை தற்காலிக கழிப்பறை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,70,000/-ற்கு பணியின் அசவர அவசியம் கருதி நகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1920 பிரிவு15-ன்கீழ் பெற்ற ஒப்பந்த்தாரர் M/S Star Group of Company, Chennai அவர்கள் மூலம் பணியினை மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கு சமப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2019/இ1**

**பொருள் எண்.10**

தமிழ்நாடு சட்ட மன்ற பொது தேர்தல் 2021, 038-அரக்கோணம் (தனி) சட்ட மன்ற தொகுதியில் அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் வாக்களிக்க ஏதுவாக அரக்கோணம் நகராட்சி பள்ளிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர், மின் விளக்கு (கூடுதலாக), மின்சவிசிறி (கூடுதலாக), தடுப்புகள் மற்றும் சாய்வுதளம் அமைத்து தரும்படி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுரை வழங்கியதை தொடந்து, ஏ.பீ.எம் நகராட்சி பள்ளி, சரோஜினி நகராட்சி பள்ளி, கிழக்கு பள்ளி, விண்டர்பேட்டை நகராட்சி பள்ளி, கிருபில்ஸ்பேட்டை நகராட்சி பள்ளி மற்றும் நேருஜி நகர் நகராட்சி பள்ளிகளின் மேற்கண்ட அடிப்படை வசதிகளை கூடுதலாக செய்து தர தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,25,000/-க்கு தேர்தல் பணியின் அசவர அவசியம் கருதி நகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1920 பிரிவு15-ன்கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு,சதீஷ்குமார் அவர்கள் மூலம் பணியினை மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கு சமப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.236/2020/இ1**

**பொருள் எண்.11**

இராணிப்பேட்டை மாவட்டம் தமிழக சட்ட மன்ற தேர்தல் 2021 அரக்கோணம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட நகராட்சி பகுதியில் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுல்படுத்தப்பட்டவுடன், நகராட்சி எல்லைப் பகுதியில் உள்ள அரசியல் கட்சிகள் சார்ந்த, கொடி கம்பங்கள், சுவர் விளம்பரங்கள் மற்றும் வால்போஸ்டர்கள் உடன் அப்புறப்படுத்தப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களால் உரிய அறிவுறை வழங்கப்பட்டுள்ளதால் தோரய மதிப்பீட்டு தொகை ரூ.2,60,000/-ற்கு தேர்தல் பணியின் அவசர போதிய கால அவசியம் இல்லாத காரணத்தால் தேர்தல் பணியின் அசவர அவசியம் கருதி நகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1920 பிரிவு15-ன்கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் SRI VARI ENTERPRISES அவர்கள் மூலம் பணியினை மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கு சமப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2019/இ1**

**பொருள் எண்.12**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | **குடிநீர் நிதி** | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள KVA ஜெனரேட்டர் இயந்திரத்தை பழுது பார்த்து பராமரித்து இயக்கி தருதல். | 6.50 | Vijay Electricals | 0.10 % | M K C Enter prices | 0.11% |

இந்நகராட்சியில் 2021-2022ன் கீழ் 16.05.2021ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1க்கான பணிக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/இ1/2020**

**பொருள் எண்.13**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள புதிய பேருந்து நிலையம் மற்றும் டவுன் ஹால் 6வது தெருவில் உள்ள பாலங்கள் சாய்வு தளம் இல்லாமல் இருப்பதால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் பேருந்து செல்ல மிகவும் சிரமாக இருப்பதால் பேருந்துகள் இடிபடாமல் சாய்வு தளம் அமைத்து தர அறிக்கை விடுத்துள்ள படியால் இந்த இரு பாலங்களையும் சாய்வு தளம் புதியதாக அமைக்கவும், மேற்கு ஒப்பந்தாரர் தெருவும், பேருந்து சாலையும் இணையும் இடத்தில் பெரும் பள்ளம் ஏற்பட்டு எள்பதால் பள்ளத்தினை உயர்த்தி மேமுபடுத்தி சாய்வு தளம் அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00லட்சத்திற்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவகளின் அனுமதிக்கு சமப்பிக்கப்படுகிறது.

**பொருள் எண்.14**

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, இராணிப்பேட்டை மாவட்டம் அவகளின் கடித ந,க.எண்.அ1/612/2020 நாள்.09,3,2021ல் கடிதத்தின்படி நகராட்சி அலுவலக வளாகத்தில் சமுதாய அமைப்பாளருக்கு தனி அறை அமைக்க தோராய செலவினம் ரூ.1.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 507/இ1/2021**

**பொருள் எண்.15**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலைய பகுதியில் உள்ள அம்மா உணவகத்தில் சமையலறை, குடிநீர் மற்றும் மின் பணிகளில் பழுது ஏற்பட்டுள்ளதால் பழுது சரிசெய்யவும் மற்றும் நராட்சிக்கு சொந்தமான ரத்தன் சந்த் நகர், சோமசுந்தரம் நகர் நுன் உரமாக்கல் மையத்தில் Conreyor Belt பழுது சரிசெய்ய தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.508/இ1/2021**

**பொருள் எண்.16**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பாலசுந்தரம் தெருவில் சாலை பழுதடைந்து பொது மக்கள் போக்குவரத்து சீரமமாக உள்ளதால் அப்பகுதியில் தற்காலிக சாலை அமைக்க தோராய செலவினம் ரூ.2.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.509/இ1/2021**

**பொருள் எண்.17**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அம்பேதிகார் நகர் மற்றும் ஏ.பி.எம் சர்ச் பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் குடிநீர் குழாய்கள் அடைப்பு ஏற்பட்டும், தரைகளில் விரிசல் ஏற்பட்டும், மின்சார வையர்கள், பிட்டிங்குகள் பழுதுடைந்து உள்ளதால் பொது மக்கள் கழிவறைகளை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும், மேலும் அப்பகுதியின் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணியாற்றும் முன்கள பணியாளர்கள் குடியிருப்பு உள்ளதால் அவசர அவசியம் கருதி உடனடியாக பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட இரு இடங்களில் உள்ள கழிவறைகளை பழுது நீக்கம் செய்து புதுப்பித்து தர தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000/- ற்கு தயாரிக்கப்பட்டுள்ளதற்கு, பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 510/இ1/2021**

**பொருள் எண்.18**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் கீழ்காணும் வாகனங்களுக்கு 2019-20 ஆம் ஆண்டிற்கான சாலைவரி செலுத்திட இந்நகராட்சி ஓட்டுநர் திரு.G.அரிகிருஷ்ணன் என்பவரை மோட்டார் வாகன அலவலகத்திற்கு நேரில் சென்று சாலைவரி தொகையினை விசாரித்து வர அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி வாகனங்களுக்கு online மட்டுமே தொகை செலுத்த இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் 2020-21 மற்றும் 2021-22 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான தொகை இந்நகராட்சி ஓட்டுனர் திரு.G.அரிகிருஷ்ணன் என்பவரின் மூலம் செலுத்தப்பட்டு அதற்கான இரசீது வழங்கியுள்ளார். எனவே கீழ்காணும் விவரப்படி சாலைவரி (ரூ.16628+ரூ.12776) **ரூ.29,404/-** தொகையை இந்நகராட்சி ஓட்டுனர் **திரு.G.அரிகிருஷ்ணன்** என்ற பெயருக்கு காசோலை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**2020-2021**

| S NO | VEHICLE NUMBER | VEHICLE DETAILS | ROAD TAX AMOUNT |
|---|---|---|---|
| 1 | TN23AR7435 | FRONT END LOADER (JCB) | 5060 |
| 2 | TN73W2299 | TIPPER LORRY | 3860 |
| 3 | TN73W2316 | TIPPER LORRY | 3848 |
| 4 | TN23AS6307 | TIPPER LORRY | 3860 |
| | | **TOTAL** | **16628** |

2021–2022

| S NO | VEHICLE NUMBER | VEHICLE DETAILS | ROAD TAX AMOUNT |
|---|---|---|---|
| 1 | TN23AR7435 | FRONT END LOADER (JCB) | 5060 |
| 2 | TN73W2299 | TIPPER LORRY | 3858 |
| 3 | TN73W2316 | TIPPER LORRY | 3858 |
| | | **TOTAL** | **12776** |

**அலுவலக குறிப்பு:** **2019–20 மற்றும் 2020–21 ஆண்டிற்கான சாலைவரி மற்றும் பசுமை வரி செலுத்திடவும், அதற்கான செலவினம் ரூ29,404/– க்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண்.19**

இந்நகராட்சி பகுதியில் கொரனா வைரஸ் காய்ச்சல் நோய் தடுப்பு பணிக்காக கபசுர குடிநீர் சூரணம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்திட கபசுர குடிநீர் சூரணம் 10 கொள்முதல் செய்து கொள்ள தொலைபேசியில் தொடர்ப்பு கொண்டு விவரம் கேட்டபோது கபசுர குடிநீர் சூரணம் 1.கிலோவின் விலை ரூ 100,01,கிலோ 1 ) –/000 1.ரூ, (–/010எனவும் தங்களுக்கு தேவைப்படும் கபசுர குடிநீர் சூரணதிற்குண்டான தொகையினை **Tampcol** என்ற பெயருக்கு வங்கி வரைவோலை எடுத்து வழங்கினால் கபசுர குடிநீர் சூரணம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதுஎனவே மேற்காணும் . கிலோ கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான தோராய 100 கபசுர குடிநீர் சூரணம் 1.10.செலவினம் ரூலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 326 /எச்1/2021**

**பொருள் எண்.20**

அரக்கோணம் நகராட்சி சாலையோர வியாபாரிகள் கூடுதலாக உள்ளவர்களை கண்டறிந்து சர்வே நடத்தி தேவையான விபரங்களை பெற்று தகுதியான நபர்களுக்கு Bio metric அடையாள அட்டை வழங்க நபர் ஒருவருக்கு தயாரிப்பு கட்டணம் தெரிவிக்க கணினி மையத்தில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| Name of the Work | Sindu Agency | Gokul Online Services | Krishan Net Center |
|---|---|---|---|
| Field Verification Charge | 62 | 50 | 73 |
| Tagg Pouch & Laminated | 55 | 30 | 32 |
| QR Code & Barcode Charge | 123 | 140 | 150 |
| ID Cards & Synthetics | 52 | 55 | 49 |
| ID Cards Printing | 65 | 32 | 55 |

| | | | |
|---|---|---|---|
| Charges | | | |
| Data Entry Charges | 52 | 35 | 45 |
| Online Working Charges | 43 | 50 | 56 |
| Photo & Printing Charges | – | 31 | 45 |
| Travel and Food | – | 100 | – |
| Total | 452 | 523 | 505 |

எனவே மேற்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய சிந்து ஏஜென்ஸிக்கு பணிஉத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ.1,50,000/– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.847/ 2020/எப்1)

**பொருள் எண்.21**

இந்நகராட்சி பகுதியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கை குறித்து கொரானா தடைசெய்யப்பட்ட பகுதி பேனர், நடமாடும் காய்கறி அங்காடி குறித்த விளம்பர பேனர்கள் மற்றும் கொரானா பணியில் ஈடுபடும் தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு அடையாள அட்டை ஆகியவை அச்சடிக்க உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | DEVAN BROTHER'S ARTS ARAKKONAM தொகைரூ | ILAYA DIGITAL KANCHIPURAM தொகைரூ |
|---|---|---|---|---|
| 1 | 3 X 2 கொரானா தடைசெய்யப்பட்ட பகுதி பேனர் | 40 | **350** | **400** |
| 2 | 4 X 3 நடமாடும் காய்கறி அங்காடி குறித்த விளம்பர பேனர்கள் | 50 | **450** | **500** |
| 3 | கொரானா பணியில் ஈடுபடும் தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டை அச்சடிக்க | 500 | **5** | **8** |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **DEVAN BROTHER'S ARTS ARAKKONAM,** அவர்களுக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான தோராய செலவின தொகை ரூ.50,000/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**2) தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான தோராய செலவின தொகை ரூ.50,000/– வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 745/எச்1/2021**

**பொருள் எண்.22**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85DBC பணியாளர்கள் வரை பயன்படுத்தி கொள்ளும் ம 31.03.2021 முதல் 01.01.2021ற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ 54.00.லட்சத்திற்கும் ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது 85 எனவே ஏற்கனவே பணி செய்து வரும் .DBC பணியாளர்களை வைத்து வரை டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணி 30.06.2021 முதல் 01.04.2021 தொடர்ந்து மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ 54.00.லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே இந்நகராட்சியில் பணி செய்து வந்த 1இன்பம் மகளிர் சுய உதவிக்குழு (2)ஏஞ்சல் மகளிர் சுய உதவிக்குழு (3இளந்தென்றல் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய மூன்று மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் 85 பணியாளர்களை பெற்று பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு .அனுமதிக்கலாம் மன்றம் :**

**ந.க.எண்.1245/2019/எச்1**

**பொருள் எண்.23**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரானா வைரஸ் (COVID–19) பரவல் தடுப்பு குறித்து பொதுமக்களுக்கு 36 வார்டுகளிலும் ஆட்டோவில் ஒலி பெருக்கி அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்கள் 29.03.2021 தேதிய காணொளி மூலம் அறிவுரை வழங்கியுள்ளார். எனவே 01.04.2021 தேதி முதல் தொடர்ந்து அவ்வப்போது தமிழக அரசால் வழங்கப்படும் அறிவுரைகளின்படி தொடர்ந்து ஆட்டோவில் ஒலி பெருக்கி அமைத்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஏற்கனவே விலைப்புள்ளி பெற்று பணி செய்து வந்த திரு.A.தாஜீதீன் என்பவரின் மூலம் (நாள் ஒன்றுக்கு ரூ.2500/–) தொடர்ந்து பணி செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமது பெற்று ஆட்டோவில் ஒலி பெருக்கி அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தியதங்றகும் மற்றும் அதற்கான செலவின தொகை வழங்கியுள்ளதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 326/எச்1/2020)**

**பொருள் எண்.24**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் பொதுசுகாதார பிரிவு வாகனங்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கான காப்பீடு (**INSURANCE**) **The New India Assurance Co Ltd, Chennai** அவர்களின் மூலம் காப்பீடு புதுபித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **2020-21 ஆண்டிற்கான காப்பீடு (INSURANCE) The New India Assurance Co Ltd, Chennai அவர்களின் மூலம் காப்பீடு புதுபித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண்.25**

அரக்கோணம் நகராட்சிக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கும் தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் நீரேற்று நிலையங்களை பராமரிக்க நகராட்சியில் போதிய பணியாட்கள் இல்லாத்தால் ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை ஒப்பந்ததாரர் மூலம் சப்ளை செய்து பணியமர்த்தி நீரேற்றும் நிலையங்களை இயக்கி குடிநீர் விநியோகம் செய்ய 2019-20ம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயகிப்பட்ட ஒப்பந்த விலைப்பட்டியலில் கண்டுள்ள தொகையின்படி ரூ.9.70 லட்சத்திற்கு நகர் மன்ற தீர்மான எண்.639 நாள்.29.11.2019-ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து பண மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் டிசம்பர் மாதத்துடன் அனுமதிக்கப்பட்ட தொகை முடிவடைவதால் குடிநீர் பணியின் அவசர அவசியத் கருதி அடுத்த நடப்பு ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும்வரையில் ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையில் 3 மாத காலத்திற்கு அதே ஒப்பந்தாரர் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில் தொகையினை வழங்கிட ஆகும் தோராய செலவினத்திற்கு ரூ,5.00 லட்சித்திற்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமது பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதற்கும் மற்றும் அதற்கான செலவின தொகை வழங்கியுள்ளதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 1307/2019/இ1**

**பொருள் எண்.26**

இந்நகராட்சியில் UTIS Phase I செயலாக்கம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ள நிலையில், தற்போது UTIS, Phase II செயலாக்கம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர், வேலூர் அவர்களின் அறிவுறுத்தலின்படி செயலாக்கம் செய்யப்பட உள்ளது. அதன்படி தற்போது UTIS Phase II செயலாக்கம் செய்ய வேண்டி கீழ்காணும் Configuration –படி கூடுதலாக கனிணி மற்றும் அதன் உபகரணங்கள் வாங்கி வழங்குமாறு உதவி திட்ட அமைப்பாளர் கோரியுள்ளதற்கு கீழ் வரும் கனினி மற்றும் அதன் உபகரணங்களை கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும், மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| .Sl.No | Item code with Description | Item Configuration | Nos |
|---|---|---|---|
| 1 | Desktop (HP Make) | Intel core i3-10 th geneation Processor at 3.5Ghz, 8GB DDR3 @ 1600 MHz upgradeable up to 16 GB, 3 PCI/PCI Express Slots. 1Gbps Network card, 4 USB Ports, 2 PS 2 Port, 18.5 inch TFT /LCD TCO Certified Colour Monitor, 1 TB HDD, DVD Writer, Membrane Keyboard, Optical Mouse, 3Bays with preloaded Windows 10 Professional with Media and License. Anti Virus with 1 Year License. | 3 |
| 2 | Laser Printer Laserjet Pro M202dw (HP Make) | Laser Technology, Speed- 20ppm, Resolution- 600X600 dpi, Paper Supply- 150Sheets or above, Media Sizes- Letter, Legal, Executive, Post Cards, Envelopes, Media Types- Paper( Plain, Recycled, Envelopes, Transparencies, Lables, and Card Stock), Interface-USB, Operating system -Windows and Linux (Driver Software Mandatory) Compatibility | 4 |
| 3 | Mouse | HP Make | 5 |
| 4 | Keyboard | HP Keyboard | 5 |
| 5 | Colour Printer | Epson L3110 - All in one - Interface-USB, Operating system -Windows and Linux (Driver Software Mandatory) Compatibility | 1 |

அலுவலகக்குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி கணினி மற்றும் அதன் உபகரணங்களை UTIS Phase II செயலாக்கம் செய்வதற்கான அவசியத்தை கருதில் கொண்டு DGST - விலையில் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.505/2021/இ1**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**